8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

33. சென்னை, தட்டான்குளம் நுகர்வோர் கூட்டுறவு அங்காடி 1982–83 ஆம் ஆண்டிற்கு செலுத்தவேண்டிய விற்பனை வரியை தள்ளுபடி செய்வது குறித்து, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30–5–1994 ஆம் நாளிட்ட 3 (டி) 21 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

34. சேலம், வெடிமருந்து தொழிற்சாலை 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் வரையில் எலும்புப் பசை விற்றது தொடர்பாக செலுத்தவேண்டிய விற்பனை வரியை ரத்து செய்வது குறித்து, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6–6–1994 ஆம் நாளிட்ட 170 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

35. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி விதிகளில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12–7–1994 ஆம் நாளிட்ட 219 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

36. திருவாளர்கள் மினரல்ஸ் மற்றும் மெட்டல்ஸ் டிரேடிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மற்றும் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனத்தினர் இறக்குமதி செய்த சர்க்கரைக்கு செலுத்த வேண்டிய சுங்க வரிக்கு விலக்களிப்பது, மற்றும் விற்பனை வரியை ரத்து செய்வது குறித்து 18–8–1994 ஆம் நாளிட்ட 263 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

1994 நவம்பர் 4]

37. சுவிஸ், அனைத்துலக அபிவிருத்தி நிர்வாகத்திடமிருந்து இலவசமாக பெறப்பெற்ற பாமோலின் எண்ணை விற்பனைக்கு இந்திய பால் அபிவிருத்தி வாரியம் மற்றும் தமிழ்நாடு எண்ணை உற்பத்திக் கழகம் ஆகியவற்றிற்கு வரி விதிப்பதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் *8-8-94* ஆம் நாளிட்ட *254*ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

38. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் *1992-93* ஆம் ஆண்டிற்கான இருபத்தியேழாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)].

39. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் *1991-92* ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)].

40. தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் *1992-93* ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

5. தமிழ்நாடு விழிப்புப் பணிக்குழுவின் *1-4-1990* முதல் *31-3-1991* வரையிலான இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

6. தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் *1992-93* ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).